சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.22.06.2026.
OS.No.158/2022
DW1 : மணிமாறன் (வயது 63 ) த/பெ. சீனிவாசன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>வாதி தரப்பு கு.வி</u>

இந்த வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்.47/10சி என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 12 சென்ட் என்றால் சரிதான். மேற்படி பழைய சர்வே எண்.47/10சி ஆனது சர்வே எண்.47/10சி1, 47/10சி2 என பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

சர்வே எண்.47/10சி2 என்பது 7 சென்டாகவும், சர்வே எண்.47/10சி1 என்பது 5 சென்டாகவும் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.47/10சி2 -ல் அன்பழகன் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.47/10சி1 க்கு கிழக்கே சர்வே எண்.47/10சி2 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.47/10சி2ல் 6 சென்டில் வீடும் அதற்கு கிழக்கே 1 சென்டில் பாதையும் விட்டுள்ளார் என்றால் சரிதான்

சர்வே எண்.47/10சி1, சி2 ஆகிய இரண்டு புலங்களும் வாதி மற்றும் அவரது சகோதர சகோதரிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் தவறு. எனது தாத்தா பெயர் ராமசாமி நாட்டார். எனது தாத்தா பெயரில் ஒரே ஒரு வீடு மட்டும் தான் இருந்தது என்றால் சரிதான், அது பழைய வீடு. அந்த வீட்டில் தான் நான் இருந்து வருகிறேன்.

தர்மலிங்கம் நாட்டாரும், எனது தகப்பனார் சீனிவாச நாட்டாரும் சகோதரர்கள் என்றால் சரிதான், அவர்கள் உயிருடன் இருந்த காலத்திலேயே அவர்களுக்கிடையே பாக பரிவினை ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். அவர்களுக்குள் என்னென்ன சொத்துக்கள் பாகமாக பிரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும்.

சர்வே எண்.47/8ஏ-வை பொறுத்தவரை எனக்கும் அன்பழகனுக்கும் பிரச்சனை என்று கூறி காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அதே போல் சர்வே எண்.47/9 குறித்து இருவருக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டு அரியலூர் பதிவாளர் வரை சென்றது என்றால் சரிதான்.

சர்வே எண்.47/10 சி1 தற்போது வரை காலியாக உள்ளது என்றால் சரிதான். அதற்கும் வடக்கே சர்வே எண். 47/8 ஏ உள்ளது என்றால் சரிதான். நாங்கள் வேண்டுமென்றே 47/8 ஏ — ல் உள்ள வேலியை அகற்றிவிட்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு 47/8 ஏ-ல் உள்ள வேலியை அகற்றுவதற்கு சர்வே எண்.47/10 சி1 வழியாக தான் சென்றோம் என்றால் சரியல்ல. சர்வே எண்.47/10 சி1 பாதையாக உள்ளது. ஆனால் சர்வே எண்.47/8 ஏ -ல் வேலி இல்லை.

சர்வே எண்.47/10 சி1, சி2 ஆகிய இரண்டு புலங்களும் தர்மலிங்கம் நாட்டார் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டடப்படும் ஆவணம் அரியலூர் மாவட்ட பதிவாளர் அவர்களின் செயல்முறைகள் சர்வே எண். 47/9 க்கு கடந்த 19.05.2023 ல் உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி நடைமுறைகளில் வாதி அன்பழகனையும், என்னையும், மார்க் என்பவரையும், எனது தம்பி செந்தில் என்பவரையும் சாட்சிகளாக விசாரித்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நால்வரும் கொடுத்த வாக்குமூலத்தின்பேரில் வா.சா.ஆ.8 செயல்முறைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ல் சர்வே எண். 47/9 ஐ பொறுத்து நான் கொடுத்த வாக்குமூலம் 3 வது பக்கத்தில் மணிமாறன் வாக்குமூலம் என்று குறிப்பிடட்பட்டவை சரிதானா என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ல் நான் கூறியுள்ள வாக்குமூலத்தின்படி 1946 லேயே எனது தகப்பனார் சீனிவாச நாட்டாருக்கும், தர்மலிங்கம் நாட்டாருக்கும் பாக பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றால் தவறு.

இருவருக்கும் இடையே பாக பிரிவினை ஏற்பட்ட பிறகு அவர்கள் இருவரும் தனி தனியாக கிரயம் வாங்கிய சொத்துக்கள் அவரவர்களுக்கு பாத்தியமானது என்றால் சரிதான். சர்வே எண்.47/10 சி1 க்கும் எனக்கும் எனது தகப்பனார் சீனிவாச நாட்டாருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அந்த சொத்து தர்மலிங்க நாட்டாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பாத்தியமானது என்றால் தவறு.

அவர்களுக்கு பாத்தியமான சொத்தின் வழியாக தான் நான் செல்வேன் என்று நான் கூறுவது எனது அராஜக போக்கை காட்டுகிறது என்றால் சரியல்ல. சர்வே எண்.47/10 சி1 சொத்தை ஆக்கிரமிக்கும் எண்ணத்தில், அந்த சொத்தின் வழியாக சென்று 47/8 ஏ-ல் உள்ள வேலியை அகற்றியது தவறான செயல் என்பதால் சர்வே எண்.47/10 சி1 க்கு எனக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. சர்வே எண்.47/10 சி2 -ல் உள்ள வாதியின் வீட்டிற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை அது அவரது வீடு தான்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 அடங்கல் மற்றும் சிட்டா தாசில்தார் அலுவலகத்தில் பெறப்படவில்லை என்றும் விஏஓ அலுவலகத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் இருக்கும்போதே அதனை வாங்கிவிட்டோம். எனது தகப்பனார் சீனிவாசன் 2018 ல் இறந்தார்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணமான பிரதம மந்திரி குடியிருப்பு திட்ட அனுமதி எந்த சர்வே எண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணத்தில் அதற்கான சர்வே எண் குறிப்பிடப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஆவணமானது நான் அன்பழகனுக்கு எதிராக நில அபகரிப்பு பிரிவில் கொடுக்கப்பட்ட புகார் ஆவணம் என்றால் இது என்னுடைய ஆவணம் இல்லை.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ஆவணமானது சர்வே எண்.47/8 ஏ- க்கு கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.8 ஆவணமானது சர்வே எண்.47/8 ஏ- க்கு கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed/
மணிமாறன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA
Date: 2026.06.22 18:12:40 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி